விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 012 வள்ளுவர் ஆண்டு 2053 மார்கழி 16 சனிக்கிழமை (31.12.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## யாழ்.மாநகர சபையின்
# முதல்வர் பதவியை துறந்தார் மணிவண்ணன்



(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாநகர சபை முதல்வர் சட்டத்தரணி மணிவண்ணன் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.**

**தனது பதவியை இராஜினாமா செய்யவுள்ளதாக கடிதம் மூலம் யாழ்.மாநகர ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.**

யாழ்.மாநகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் ஏழு மேலதிக வாக்குகளால் 2022 டிசம்பர் 21ம் திகதி தோற்கடிக்கப்பட்டது.

இந்நிலையில் ஒன்பது நாட்களுக்கு பின்னர் மாநகர 11

### அல்வாயில்
## கிணற்றிலிருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்பு

(கரணவாய்)

வடமராட்சி அல்வாய் பகுதியில் கிணற்றில் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அல்வாய் அம்பாள் கோவிலடியைச் சேர்ந்த 60 வயது 11

### இன்றும் நாளையும்
## மின்வெட்டு இல்லை

(கொழும்பு)

நாட்டில்இன்று சனிக்கிழமை மற்றும் நாளை ஜனவரி முதலாம் திகதி மின்வெட்டு அமுல் படுத்தப்பட மாட்டாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 11

## பயணிகள் கப்பல் சேவைக்காக துறைமுகமாக அறிவிக்கப்பட்ட காங்கேசன்துறை
### அதிவிசேட வர்த்தமானியும் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தை உள்வருகை மற்றும் வெளியேறலுக்கு அனுமதியுடைய துறைமுகமாக அறிவித்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

டிசம்பர் 23ஆம் திகதிக்கு திகதியிடப்பட்டு, இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியாக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைக்கும், புதுச்சேரிக்கும் 11

### யாழ்.மாவட்ட
## பதில் அரச அதிபராக பிரதீபன் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இருந்த மருதலிங்கம் பிரதீபன் யாழ்.மாவட்ட பதில் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று வெள்ளிக்கிழமையுடன்யாழ்மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த கணபதிப்பிள்ளை மகேசன்பதவிஉயர்வு பெற்று இளை 11



### தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின்
## வட மாகாண பணிப்பாளராக தெய்வேந்திரராஜா நியமனம்

(யாழ்ப்பாணம்)

தேசிய பொலிஸ் ஆணைக் குழுவின் வடமாகாணத்திற்கான மாகாணப் பணிப்பாளராக யாழ்ப்பாண கல்வி வலயத்தின் முன்னாள் பணிப்பாளர் நடராஜா தெய்வேந்திரராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவராகிய ந.தெய்வேந்திரராஜா ஹாட்லிக் கல்லூரியின் அதிபராக இருந்ததுடன் யாழ்ப்பாண கல்வி 11

## கொரோனா அச்சுறுத்தல் இன்னும் நீங்கவில்லை
### சுகாதார நடைமுறைகளை பின்பற்றுமாறு சுகாதார அமைச்சு அறிவிப்பு



(கொழும்பு)

கோவிட்-19 அச்சுறுத்தலில் இருந்து இலங்கை முழுமையாக வெளியேறவில்லை எனவும், அடிப்படை சுகாதார நடைமுறைகளை அனைவரும் தொடர்ந்து கடைப்பிடிப்பது முக்கியம் என பொது சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் 11

## பேருந்தில் கைவரிசை 3 பெண்கள் நையப்புடைப்பு
### பரந்தன் சந்தியில் சம்பவம்

(கிளிநொச்சி)

பேருந்தில் கைவரிசை காட்டிய மூன்று பெண்கள் பொதுமக்களினால் நையப்புடைக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கிளிநொச்சி பரந்தன் சந்திப் பகுதியில் நேற்று மதியம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து மல்லாவிநோக்கி தனியார் பேருந்து ஒன்று 11

## அரசாங்க அதிகாரிகளுக்கு ரூ.4 ஆயிரம் கொடுப்பனவு

(கொழும்பு)

அரச உத்தியோகத்தர்களுக்கு விசேட முற்பணம் செலுத்துவது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சு சுற்றறிக்கையொன்றினை வெளியிட்டுள்ளது.

அதன்படி 2023 11

### யாழில் வன்முறைக்கு
## தயார் நிலையில் இருந்த 13 பேர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் வன்முறை சம்பவம் ஒன்றினை மேற்கொள்ள தயார் நிலையில் இருந்த 13 பேர் நேற்று இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் அரசடி பகுதியில் வன்முறை கும்பல் ஒன்று ஒன்றுகூடி நிற்பதாக யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமையாளர் இடமாற்றம்

கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சி கடை
உரிமையாளர் நல்லையா உதயகுமார் (பெரியதம்பி)
கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சி கடை
இரண்டாம் (2)இலக்க கடையில் இயங்குகிறது
ஆரம்பம் 01.01.2023 என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு
அறியத் தருகின்றோம்.

தொ.இல. : 077 085 6479 (13924)


# குழியில் விழுந்த சிறுவன் பலி

(கொழும்பு)

அம்பாறை - ஆலையடிவேம்பில் மல சலகூடத்துக்காக வெட்டப்பட்ட குழியில் வீழ்ந்து 7 வயது சிறுவர் ஒருவன் உயிரிழந்துள்ளார்

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத் துக்குட்பட்ட கண்ணகி கிராமத்தில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரவிக் குமார் லதீஸ் எனும் சிறுவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.(ம-7)


## கண்ணீர் அஞ்சலி



(C-5694)

எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ஞானசசி அவர்களின்
அன்புக் கணவர்

அமரர் கந்தசாமி
ஜெகநாதன்

அவர்கள் காலமான செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

## சேவைநலன் பாராட்டு



திருமதி மீனலோஜினி
சுப்பிரமணியம்

(அதிபர் - யா/கந்தரோடை
தமிழ்க் கந்தையா வித்தியாசாலை)

எண்ணிய முடிக்கும் ஆற்றல்
ஏற்றமாய் உயர்ந்த வாண்மை
திண்ணிய நெஞ்சம் கொண்ட
திடமொடு உழைத்த மேன்மை
கண்ணிலே கனிவு தாங்கிக்
கரைந்திட வைக்கும் அன்பு
மண்ணிலே ஓய்வுகாலம்
மகிழ்வுடன் பெருக வாழி

31.12.2022 அன்று ஓய்வுபெறும்
அதிபரது ஓய்வுக்காலம்
சிறக்க வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:- ஓய்வுநிலை அதிபர், ஓய்வுபெற்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள்

திரு.சி.சிவராஜன் (ஓய்வுநிலை அதிபர்)
திருமதி ச.திருஞானச்செல்வன்
திருமதி த.அம்பிகைவாகன்
திருமதி மை.றேகன்
திரு.தி.சாந்தகுமார்
திருமதி த.நடேசன்
திருமதி தி.பார்த்தீபன்
திருமதி த.சற்சொரூபன்
திருமதி பி.ஜெயகாந்தன்
திரு.பா.மேகலதன்

(13962)

## என்றும் உங்கள் நினைவுடன்



அமரர்
திருமதி திலகவதி இம்மானுவேல்
மலர்வு :01.03.1959
உதிர்வு : 31.12.2011



அமரர்
செல்வன் இம்மானுவேல் றஞ்சித்
மலர்வு: 06.09.1997
உதிர்வு : 23.07.1999

கனவுகள் கலைந்து
நினைவுகள் நீள்கிறது
மனங்கள் கனத்து
நினைவுகள் துளிர்கிறது
நினைத்து நினைத்து ஏங்குகிறோம்
யார் அறிவார் எம் துயர் மனதை?

(13968)

பிலிப் இம்மானுவேல் மற்றும் குடும்பத்தினர்

## மணிவிழா நாளில்
## பணிநயந்து வாழ்த்துகிறோம்



கிளி/மாயவனூர் வித்தியாலய அதிபரும் எமது அதிபர் சங்கத்தின்
உறுப்பினருமான

திருமதி லக்ஷ்சாந்தி கோபாலராசா
(Trd.in Primary, SLPS-2)

சேவை விபரம்

01.09.1992 - 31.12.1999 - கிளி/ இராமநாதபுரம் ம.வி
01.01.2000- 31.12.2001 - கிளி/ பன்னங்கண்டி இ.த.க.பாடசாலை
01.01.2002 - 31.12.2001 - கிளி/ அழகாபுரி வித்தியாலயம்
01.01.2003 - 31.12.2022 - கிளி/ மாயவனூர் வித்தியாலயம்

நீண்ட கல்விப் பணியாற்றி இன்றுடன் பணி ஓய்வுபெறும் அதிபர்
அவர்களது ஓய்வுக் காலம் சிறக்க வாழ்த்துகிறோம்.

வாழ்த்துவோர்:- அதிபர் சங்கம்
கிளிநொச்சி மாவட்டம்

(C-5704)

## 26வது பிறந்தநாள் நினைவலைகள்

வெற்றிவேலு பிரசாந்தி

(யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
க.பொ.த உயர்தரம் (கணிதப்பிரிவு) 2015

தாயின் மடியில் 31.12.1996
நோயின் பிடியில் 31.08.2016



நெஞ்சில் காயம் தந்து
எங்கள் நேசப்பறவை
தொலைதூரம் சென்றது...!
செல்லமே! துயரம் மூழ்கி
சோகம் வந்தது
நினைவில் பதிந்து
எமை அழ வைக்கிறது...
காலம் கடந்தும் நின் நினைவு
எமை நனைக்கிறது அம்மா...
எத்தனை ஆண்டுகள் ஆனாலும் – உன்
எண்ணங்கள் எமைவிட்டு அகலாதம்மா...!
எண்ணி எண்ணித் தவிக்கின்றோம்
எப்போது நீ வருவாய் என்று
பிறந்தநாள் வாழ்த்துச் சொல்ல
பிரியமுடன் உனை அழைக்கின்றோம்...!
ஓடி வந்திடம்மா எம்மனைக்கு...!

விண்ணுலகில் வாழும் எங்கள் கடைக்குட்டிச் செல்லத்திற்கு
கண்ணீரில் நனைந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள்

"பிரசாந்தி வாசா"
வல்லை ஒழுங்கை,
துன்னாலை, பருத்தித்துறை.

(C-5703)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
077 986 2521


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மக்கள் ஆணைக்கு பயந்து தேர்தலை பிற்போட முயற்சி

## வாசுதேவ சாடல்



(கொழும்பு)

மக்களாணைக்கு அச்சமடைந்து தேர்தலை பிற்போட முயற்சிப்பதையிட்டு அரசாங்கம் வெட்கமடைய வேண்டும் என இடதுசாரி ஜனநாயக முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டால் ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைத்து அரசாங்கத்திற்கு எதிராக மாபெரும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்டணியாக போட்டியிட தீர்மானித்துள்ளதாகவும் அனைத்து அரசியல்கட்சிகளும் கூட்டணி அடிப்படையில் போட்டியிட பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எந்தக் கட்சியும் இனி தனித்து போட்டியிட்டு வெற்றி பெற முடியாது எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (நி)


# சேவை நலன் பாராட்டு



கடந்த 28 வருடங்களாக அரச சேவைகளில்
கிராம அலுவலர், நிர்வாக கிராம அலுவலர்
ஆகிய பதவிகளை அலங்கரித்து
30.12.2022 அன்று ஓய்வு பெற்றுச் சென்ற

**திரு கிருஸ்ணபிள்ளை ரவிகுமார்**

**(1994.03.01 – 2022.12.30)**

அவர்களின் சேவைகளை பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

**பிரதேச செயலாளர்**
**நிர்வாக கிளை அலுவலக கிளை**
**உத்தியோகத்தர்கள்**
**கிராம அலுவலர்கள்**
**பிரதேச செயலகம்**
**கரவெட்டி**

(C-5707)


## நரேந்திர மோடியின் தாயார் காலமானார்

(டில்லி) இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் ஹீராபென் தமது 99 ஆவது வயதில் காலமானார்.

வயது முதிர்வு காரணமாக ஏற்பட்ட உடல்நலக் குறைவால் குஜராத் மாநிலம் அகமதாபாத் தில் உள்ள மேத்தா இதய சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையத்தில் அவர் கடந்த புதன்கிழமை அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று அதி காலை 3.30 இற்கு அவர் காலமானதாக பிரதமர் மோடி டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார். (நி)


**காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்**

நடாத்தும்

# தெய்வீக கலையரங்கு

(திருவெம்பாவை 6 ஆம் நாள்)

**இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.**

**காலம் : 02.01.2023 திங்கட்கிழமை பி.ப 4.00 மணி**

நிகழ்வுகள்

- மாணிக்கவாசகர் மண்டபத்திற்கு எழுந்தருளல்
- தீபாராதனை
- வேதபாராயணம் – ஈழத்து வேத விற்பன்னர்கள்
- திருவாசகம் ஓதல் – திருவாசக்குயில் காரை **லீலாவதி இராசரத்தினம்**
- சொற்பொழிவு – 'தனித்துணை'
  வழங்குபவர் : சொல்லின்செல்வர் **இரா.செல்வவடிவேல்** அவர்கள்
- உயர்விருது வழங்கிக் கௌரவித்தல் : 'நாட்டிய வித்தகன்'
  பெறுபவர் : **ஆனந்த கிருஷ்ணன் ஸ்ரீகாந்த்** அவர்கள்
- மாணவர்களின் அர்ப்பண நிகழ்வுகள்
- சிறப்பு நிகழ்ச்சி : பட்டிமண்டபம்

தலைப்பு

**பழம் பெருமைகளில் குளிர்காயும் தமிழர்கள் இன்றைய நிலையில் தம்மை நிலை நிறுத்திக் கொள்ளும் முயற்சிகளை'**

| மேற்கொள்கின்றனர்! | மேற்கொள்ளவில்லை! |
|---|---|
| தெ.ஹர்சன், பரா.ரமேஸ், ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீ | ந.ஐங்கரன், த.கருணாகரன், ச.சஜீவன் |

நடுவர்
சிதம்பரஜோதி, தமிழருவி, த.சிவகுமாரன் அவர்கள்

குறிப்பு : நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து பி.ப.3.45 மணிக்கு ஆரம்பமாகும்(இல.428, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர்.

(C-5708)







# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவும்

## நாவலர் அவர்களின் நூல்களின் கண்காட்சியும் நாவலர் நினைவு மலர் வெளியீடும்

இடம் : சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு.
காலம் : 01.01.2023 ஞாயிறு காலை 09.00 மணி

நாவலர் பெருமானின் திருவுருவம் செல்வச்சந்நிதி
ஆலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்து வரப்படல்

தலைவர்
திரு.ஆ.சிவநாதன் அவர்கள்
(ஓய்வுநிலை அதிபர்)

பஞ்சபுராணம் ஓதல்

ஆசியுரைகள் : சிவஸ்ரீ சோ.தண்டபாணிக தேசிகர் அவர்கள்
பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் அவர்கள்

அருளுரை : ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் அவர்கள்
2 ஆவது மகா சந்நிதானம்

தலைமையுரை

சொற்பொழிவு : நாவலரின் தமிழ்ப்பணி
திரு.வேல் நந்தகுமார் அவர்கள்
(விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை)

அறநெறிப்பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள்

சொற்பொழிவு : நாவலரின் சமயப்பணி
சைவப்புலவர் திரு.ச.முகுந்தன் அவர்கள்
(ஆசிரிய வளவாளர், வலிகாமம் கல்வி வலயம்)

வில்லுப்பாட்டு : க.சத்தியதாஸ் குழுவினர்

சொற்பொழிவு : நாவலரின் சமூகப்பணி
திரு.வே.ஞானசம்பந்தன் அவர்கள்
(விரிவுரையாளர், தேசிய கல்வியியற் கல்லூரி. வவுனியா)

பண்ணிசையும் பாமாலையும் : திரு.N.S. பிரதீபன் குழுவினர்
(ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை)

நாவலரின் நினைவு மலர் வெளியீடு

அறிமுகவுரை : திரு.இரா.செல்வவடிவேல் அவர்கள்
(ஆசிரியர்)

மதிப்பீட்டுரை : திரு.மு.கௌரிகாந்தன் அவர்கள்
(ஓய்வுநிலை விரிவுரையாளர்)

யாழ்.கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் புலமை பரீட்சையில் சித்தியடைந்த 12 மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கல்.

அமரர்.மகேஸ்வரன் நினைவாக மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்.

நன்றியுரை : திரு.ச.வாகீசன் அவர்கள்
(ஆசிரியர்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**சந்நிதியான் ஆச்சிரமம்**
**சைவ கலை பண்பாட்டு பேரவை**

(13956)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோர்ஜ் வெப்ஸ்ரார் வெற்றிக் கிண்ணம்

## மாகாண சம்பியன்ஸ் சென்றலைட்ஸ் முன்னிலையில்




யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 13 வருடங்களாக நடத்தி வரும் யாழ்.நகரில் சிறந்த கழக அணித் தெரிவுக்கு பாலகிருஷ்ணன் வெற்றிக் கிண்ணத்திற்காக 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடருக்கான போட்டிகளில் பங்குபற்றிய 25 கழகங்களில்,

வடக்கில் மாகாண சம்பியனை சென்றலைட்ஸ் அணி 5 போட்டிகளில் பங்கு பற்றி 5 இலும் வெற்றி பெற்று 23.83 புள்ளிகளைப் பெற்று முன்னிலையில் உள்ளது.




ஜொலிஸ்ரார் அணி 5 போட்களில் பங்குபற்றி 4 போட்டிகளில் வெற்றி பெற்று 20.97 புள்ளிகளைப் பெற்று 2 ஆம் இடத்திலும் AB அணி 4 போட்டிகளில் பங்கு பற்றி 3 போட்டிகளில் வெற்றி பெற்று 16.32 புள்ளிகளைப் பெற்று 3 ஆம் இடத்திலும் உள்ளது.




அத்துடன் ஸ்கந்தாஸ்ரார் 11.85 (03/02), டிறிபேக்ஸ்ரார் 11.28 (03/02), யாழ்.ஜொனியன்ஸ் 11.05 (03/02), மூளாய் விக்டோறி 10.97 (03/02), மானிப்பாய் பரீஸ் 9.68 (03/02), T.C.C 7.04 (02/01), ஹாட்லியைபிற்ஸ் 6.41 (02/01), நியூஸ்ரார் 2.15 (01/00), டிறைற்றோன் 2.08 (01/00), K.C.C.C 2.02 (01/00), விக்ரோறியன்ஸ் 1.87 (01/00), ஓல்ட்கோல்ஸ் 1.81 (01/00), T.YMHA 1.76 (01/00), அரியாலை சென்றல் 1.73 (01/00), யூனியன்ஸ் 1.66 (01/00), சிறிகாமாட்சி 1.65 (01/00), கிறாஸ்கொப்பர்ஸ் 1.54 (01/00), பற்றீசியன்ஸ் 1.52 (01/00), றெயின்போ 1.25 (01/00), யாழ். சென்றல் 1.14 (01/00), ஸ்ரான்லி 0.73 (01/00) ஆகிய புள்ளிகளைப் பெற்றுள்ளன. (4)

## கால்பந்து ஜாம்பவான் பீலே 82 வயதில் காலமானார்



பிரேசிலைச் சேர்ந்த பிரபல கால்பந்து ஜாம்பவான் பீலே உடல் நலக்குறைவால் நேற்று முன்தினம் தனது 82 ஆவது வயதில் காலமானார்.

21 வருட கால்பந்து பயணத்தில் அவர், ஆயிரத்து 363 போட்டிகளில் ஆயிரத்து 281 கோல்களை அடித்ததன் மூலம் உலக சாதனை படைத்தார்.

1958, 1962 மற்றும் 1970 ஆகிய ஆண்டுகளில் உலகக் கோப்பையை மூன்று முறை வென்ற ஒரே வீரர் பீலே. 2000 ஆம் ஆண்டில் பிபாவின் நூற்றாண்டின் சிறந்த வீரராக தேர்ந்தெடுக்கப்பட்டார். (4)


சேவை நலன் பாராட்டு



எமது அலுவலகத்தில் சுகாதார தொழிலாளியாக (2000.07.01-2022.12.31) கடமையாற்றி இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும்

திரு. சுபாரட்ணம் மதிமுருகன்

அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு நீண்ட ஆயுளோடு சுகதேகியாக வாழ வாழ்த்துகின்றோம்.

(13967)

ஊழியர் நலன்புரிச்சங்கம், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய்.

சேவை நலன் பாராட்டு

எமது அலுவலகத்தில் ஆயுர்வேத மருந்தாளராக (2008.02.01-2022.12.31) கடமையாற்றி இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும்

திரு. இரகுநாதன் சந்திரசேகரன்

அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு நீண்ட ஆயுளோடு சுகதேகியாக வாழ வாழ்த்துகின்றோம்.



(13967)

ஊழியர் நலன்புரிச் சங்கம், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

சேவை நலன் பாராட்டு



எமது அலுவலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக (2018.03.12-2022.12.31) கடமையாற்றி இன்றுடன் ஓய்வு பெற்றுச்செல்லும்

திரு. சின்னையா தயாபரன்

அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு நீண்ட ஆயுளோடு சுகதேகியாக வாழ வாழ்த்துகின்றோம்.

(13967)

ஊழியர் நலன்புரிச் சங்கம், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

சேவை நலன் பாராட்டு



எமது அலுவலகத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக (2018.03.02-2022.12.31) கடமையாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும்

திரு.சிவராசா சிவயோகராசா

அவர்களின் சேவையினைப் பாராட்டுவதோடு நீண்ட ஆயுளோடு சுகதேகியாக வாழ வாழ்த்துகின்றோம்.

(13967)

ஊழியர் நலன்புரிச் சங்கம், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மார்கழி இசைவிழாவின் இறுதி நாள் நிகழ்வு நேற்று யாழ்.பல்கலையில் சிறப்புற இடம்பெற்றது.
(படங்கள்:-சிவசாந்தன்)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ நாகரிகத் துறையின் ஏற்பாட்டில் 2022 ஆம் ஆண்டிற்கான கிறிஸ்து பிறப்பு ஒளிவிழா கடந்த 20 ஆம் திகதி கைலாசபதி கேட்போர் கூடத்தில் சிறப்புற நடைபெற்றது.

# தேர்தலை பிற்போட வேண்டிய தேவை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு கிடையாது

(கொழும்பு)

தேர்தலை பிற்போட வேண்டிய தேவை ஆணைக்குழுவிற்கு கிடையாது என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.பத்திரண தெரிவித்துள்ளார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தேர்தலுக்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஜனவரி மாதம் முதல் வாரத்தில் வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். தேர்தலை பிற்போட தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு திரை மறைவில் இருந்து கொண்டு செயற்படுவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

கருத்து சுதந்திரம் அனைவருக்கும் பொறுப்பாக்கப்பட்டுள்ளதால் அனைவரது கருத்துக்களையும் ஏற்றுக்கொள்வதாகவும் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பி.பத்திரண தெரிவித்துள்ளார். (நி)

# புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளை பெப்ரவரியில் வெளியிட தீர்மானம்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்களை திருத்தும் பணிகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

42 மையங்களில் இந்த பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் எல். எம். டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

ஆறாயிரத்து 20 உத்தியோகத்தர்கள் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் பரீட்சை பெறுபேறுகள் பெப்ரவரி மாதம் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த டிசெம்பர் 18 ஆம் திகதி 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சை 2 ஆயிரத்து 894 பரீட்சை நிலையங்களில் இடம்பெற்றதுடன் மூன்று இலட்சத்து 34 ஆயிரத்து 698 மாணவர்கள் தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

## எல்லை தாண்டிய மீன்பிடி இல்லாததால்

# பெருந்தொகையான இறால்கள் முல்லையில் பிடிபட்டன

## மீனவர்கள் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

இந்திய கடற்றொழிலாளர்களின் எல்லை தாண்டிய மீன்பிடித் தொழில் கட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக பெருந்தொகையான இறால் பிடிபட்டுள்ளதாக முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தமது இடங்களுக்கு அழைத்துச் சென்று, தங்களினால் பிடிக்கப்பட்ட இறால்களை காண்பித்த கடற்றொழிலாளர்கள், இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறலை கட்டுப்படுத்தியமைக்காக தமது நன்றியையும் தெரிவித்தனர்.

இதன்போது இந்தியக் கடற்றொழிலாளர்களின் அத்துமீறல்களைக் கட்டுப்படுத்துவதற்கு கடற்படையினரை மாத்திரம் நம்பி இருக்காமல், கடற்றொழிலாளர்களும் அதுதொடர்பாக கரிசனையுடன் செயற்பட வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (4)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
திரு. பு.கமலாகரன் அவர்களின்
அன்புச் சகோதரன்

**திரு. புஸ்பரட்ணம் தயாபரன்**



அவர்கள் 29.12.2022 அன்று அமரத்துவம்
அடைந்ததையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
(13964) இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.


# இராசிபலன்

31.12.2022
மார்கழி 16, சனிக்கிழமை
நவமி முன்னிரவு 11.45 மணிவரை

ரேவதி பிற்பகல் 5.05 மணிவரை
சுபநேரம்- 3.29-4.59 மணிவரை
இராகுகாலம் -9.29-10.59 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூரம், உத்தரம்

வளவன்



மேஷம்

குடும்பத்திற்கு தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.



கடகம்

முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், உடல் நலம் சீராகும், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள் , தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம்.



துலாம்

தெய்வீகச் சிந்தனை மேலோங்கும் நாள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், உடல் நலனில் முன்னேற்றம் காண்பீர்கள்.



மகரம்

விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும், வழிபாடு சிறப்பினைத் தரும், பாகப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



ரிஷபம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



சிம்மம்

சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.



விருச்சிகம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்கால நலன் கருதி புதிய முயற்சிகள் எடுப்பீர்கள், பிள்ளைகளின் நலனில் அக்கறை கூடும்.



கும்பம்

நன்மைகள் நடைபெறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வாக்கு மேன்மையுண்டு, எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும் நாள், பணவரவு திருப்தி தரும்.



மிதுனம்

உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், தொட்ட காரியங்கள் கைகூடும் நாள், நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.



கன்னி

பொறுமையால் பெருமை சேரும் நாள், நண்பர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.



தனுசு

உறவினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் விலகுவர், பெற்றோர் மீது பிரியம் கூடும்.



மீனம்

பொருளாதார நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள்.

நம்மால் செய்ய முடிந்ததைச் செய்வதே தர்மம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப் பண்ணை வேண்டும் என யாழிலில் நேற்று கவனயீர்ப்புப் பேரணி

**(யாழ்ப்பாணம்)**

**கடற்றொழில் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு அட்டைப்பண்ணைகள் வேண்டுமென நேற்று வெள்ளிக்கிழமை யாழ்.கோட்டைப் பகுதியில் இருந்து யாழ்.பேருந்து தரிப்பு நிலையம் வரை பேரணி முன்னெடுக்கப்பட்டது.**



பேரணியில் கலந்து கொண்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கடற்றொழில் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு அட்டைப்பண்ணைகள் பெரிதும் உதவுகின்றன.

தற்போதைய நாட்டின் பொருளாதார நெருக்கடியில் நாட்டுக்கும் மக்களுக்கும் அந்நியச் செலாவணியைப் பெற்றுக் கொடுக்கும் ஒரு தொழிலாக அட்டைப் பண்ணை காணப்படுகின்றது.

சிலர் தமது குறுகிய தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக கடற்றொழிலை மேற்கொள்ளாத சிலரும் அட்டைப் பண்ணையை விரும்பாத சிலரும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். (4-104).

# நல்லூரில் வாள்வெட்டு இளைஞன் படுகாயம்

(அராலி)

யாழ்ப்பாணம் - நல்லூர் கோவில் வீதியிலுள்ள தனியார் விடுதியொன்றுக்குள் நுழைந்த மர்ம கும்பல் நடத்திய வாள் வெட்டு தாக்குதலுக்கு இலக்காகி இளைஞனொருவர் காயமடைந்துள்ளார்.

பண்டத்தரிப்பு அம்மன் கோவில் வீதியைச் சேர்ந்த 21 வயது இளைஞனே காயமடைந்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

மூன்று மோட்டார் சைக்கிள்களில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு 8 மணியளவில் வந்த வன்முறைக் கும்பல் விடுதியில் நின்றவர் மீது வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (4-104)

# அங்குரார்ப்பண நிகழ்வு

(அராலி)

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நலன்புரி நிதியமானத்தின் அங்குரார்ப்பண வைபவம் இன்று காலை 8.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் கேசவதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் இ.விஜயமோகனராசா கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது கூட்டுறவுப் பணியாளர்களின் பிள்ளைகளான மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்படவுள்ளன. (4-104)

# பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் பொருட்கள், ஆவணங்கள் திருட்டு

## பெண்கள் அமைப்பு நேற்று போராட்டம்



(தருமபுரம்)

கிளிநொச்சி தொண்டமான் நகர்ப் பகுதியில் பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் இணைப்பு அலுவலகம் உடைக்கப்பட்டு பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டதை கண்டித்து நேற்று வாயில் கறுப்புப் பட்டிகளை அணிந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது

கிளிநொச்சி தொண்டமான் நகரில் அமைந்துள்ள பெண்கள் வாழ்வுரிமைச் சங்கத்தின் மாவட்ட இணைப்பு அலுவலகம் கடந்த 28 ஆம் திகதி இரவு உடைக்கப்பட்டு பெறுமதி வாய்ந்த இரண்டு மடிக்கணனிகள் மற்றும் கணனி உள்ளிட்ட உபகரணங்களும் ஆவணங்களும் திருடப்பட்டன.

குறித்த சம்பவத்தை கண்டித்து நேற்று கிளிநொச்சி பழைய மாவட்ட செயலகத்தின் முன்பாக கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பெண்கள் வாயில் கறுப்புப் பட்டிகளை அணிந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்

குறித்த போராட்டத்தில் பொது அமைப்புகள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-316)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

வருடாந்த திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை முதலாம் திகதி யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை மண்டபத்தில் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது என சைவ பரிபாலன சபை செயலாளர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 500 | 500 |
| உருளைக்கிழங்கு | 180 | 160 | 160 |
| பச்சைமிளகாய் | 380 | 300 | 400 |
| தக்காளி | 220 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 240 |
| கோவா | 120 | 180 | 150 |
| கரட் | 200 | 350 | 350 |
| பூசணி | 180 | 120 | 240 |
| புடோல் | 250 | 180 | 280 |
| வாழைக்காய் | 150 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 800 | 700 | 800 |
| பெரிய வெங்காயம் | 240 | 180 | 250 |
| பாகற்காய் | 600 | 500 | 700 |
| வெண்டக்காய் | 200 | 180 | 320 |
| கருணைக் கிழங்கு | 100 | 120 | 150 |
| பயற்றங்காய் | 600 | 450 | 500 |
| லீக்ஸ் | 420 | 420 | 450 |
| பீற்றூட் | 400 | --- | 500 |
| கறிமிளகாய் | 750 | 800 | 800 |
| முருங்கைக்காய் | --- | --- | --- |
| போஞ்சி | 500 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 450 | --- | 450 |
| கீரை - 1 பிடி | 120 | 150 | 120 |
| தேசிக்காய் | 150 | 150 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 300 | --- | 350 |
| வெங்காயப்பூ | 600 | --- | --- |
| முள்ளங்கி | 200 | --- | 150 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 40 | 50 |
| ஈரப்பலா | 100 | --- | 150 |

# தெல்லிப்பழை பொலிஸாருக்கு எதிராக கிராம உத்தியோகத்தர்கள் போர்க்கொடி

(அராலி)

தெல்லிப்பழை பொலிஸாருக்கு எதிராக, தெல்லிப்பழை பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை நேற்று முன்னெடுத்தனர்.

இப்போராட்டம் குறித்து தெரிய வருகையில்,

ஜே/239 பிரிவு கட்டுவன் மேற்கு கிராம உத்தியோகத்தர் அலுவலகம் சில தினங்களுக்கு முன்னர் தீயிட்டு எரிக்கப்பட்டது. இது குறித்து தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை தெல்லிப்பழை பொலிஸார் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என தெரிவித்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "சமாதான அலுவலர், சமாதான நீதவானுக்கே இந்த நிலையா?, இன்று எங்களுக்கு நாளை உங்களுக்கு, எங்கள் சேவைக்கு பாதுகாப்பு இல்லையா?, அலுவலகத்தை சேதமாக்கியோரை கைது செய், தீ வைத்தது உங்கள் கை வெந்தது உங்கள் சொத்து" என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (4-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மாணவர்களை காப்பாற்ற

# போதைப் பொருள் வியாபாரிகளுக்கு மரணதண்டனை விதியுங்கள்

## சிறுவர் மற்றும் பெண்கள் விவகார இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் ஆபத்தில் இருந்து காப்பாற்ற பிரதான போதைப்பொருள் வியாபாரிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என சிறுவர் மற்றும் பெண்கள் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனையில் இருந்து பிள்ளைகளை பாதுகாக்க பாடசாலைகளில் சோதனை நடத்தப்பட்டாலும் பாடசாலைக்குள் போதைப் பொருள் செல்லும் வழியை தடுக்க வேண்டும்.

மிகப்பெரிய அளவில் போதைப் பொருள் சுற்றிவளைப்பு தேடுதல்களை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். கைப்பற்றிய போதைப்பொருளுக்கு என்ன நடந்தது என்பதை வெளியிடும் பொறுப்பு போதைப்பொருள் தடுப்பு பணியகத்திற்குரியது எனவும் அவர் தெரிவித்தார். (நி)

---

# சேவை நலன் பாராட்டு

திருமதி. விஜயகுமாரி ஸ்ரீபாஸ்கரன் S.L.P.S-I

அதிபர் யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் கல்விப் புலத்தில்

ஆசிரியர் பணி

15.03.1990 தொடக்கம் 19.07.1990 வரை

அதிபர் பணி

20.07.1990 தொடக்கம் 31.12.2022

யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலத்தில் அதிபராக பணிபுரிந்து 31.12.2022 இன்று ஓய்வுபெறும் அதிபரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.




(C-5699)

தென்மராட்சி அதிபர் சங்கம்

---

# சேவை நலன் பாராட்டு




திரு. கந்தையா தேவநேசன் S.L.T.S-I

பதில் அதிபர் யா/கோவிலாகண்டி வித்தியாலயம் கல்விப் புலத்தில்

ஆசிரியர் பணி

17.08.1988 தொடக்கம் 03.04.2012 வரை

அதிபர் பணி

04.04.2012 தொடக்கம் 31.12.2022 வரை

யா/கோவிலாகண்டி வித்தியாலயத்தில் அதிபராக பணிபுரிந்து 31.12.2022 இன்று ஓய்வு பெறும் அதிபரின் சேவையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-5700)

தென்மராட்சி அதிபர் சங்கம்

---

# சேவை நலன் பாராட்டு

## மணிவிழாக் காணும் நாயகி

திருமதி. பவானி சந்திரசேகர் இலங்கை ஆசிரியர் சேவை - I



எமது பாடசாலையில் ஆசிரியராகச் சேவையாற்றி (31.12.2022) ஓய்வுபெறும் திருமதி. பவானி சந்திரசேகர் அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவரது ஓய்வுக்காலம் மேலும் சிறப்புற வாழ்த்துகிறோம்

### சேவை விபரம்

16.04.1985-14.05.1989 பது/பாரதி வித்தியாலயம்

15.05.1989-01.02.1990 யா/வரணி மத்திய கல்லூரி

02.02.1990-31.12.1991 யா/கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

01.01.1992-09.02.1997 யா/வரணி மத்திய கல்லூரி

10.02.1997-09.01.2008 யா/கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி

10.01.2008-01.08.2010 யா/மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம்

02.08.2010-31.12.2022 யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை

(C-5701)

ஆசிரியர் சகோதரத்துவம்,

யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை, சங்கத்தானை, சாவகச்சேரி.

---

# சேவைநலன் பாராட்டு

செல்வி. எலிசபெத் அந்தோனிப்பிள்ளை

(SLTS-I)




யா/ இணுவில் மத்திய கல்லூரியில் எட்டு ஆண்டுகளாக (2014.01.17-2022.12.22) விஞ்ஞான பாட ஆசிரியராகக் கடமையாற்றிய செல்வி எலிசபெத் அந்தோனிப்பிள்ளை ஆசிரியை அவர்கள், முப்பது ஆண்டு கால கல்விச் சேவையிலிருந்து ஓய்வு பெறுகின்றார். அதே வேளையில் மணிவிழாவைக் காணுகின்ற அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் கல்லூரிச் சமூகம் பெருமையடைகின்றது. நீண்ட ஆயுளுடனும் மனநிறைந்த மகிழ்ச்சியுடனும் இன்பமாக வாழ வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசார ஊழியர் நலன்புரிச்சங்கம்

யா/இணுவில் மத்திய கல்லூரி.

(13965)

---

# சேவைநலன் பாராட்டும் வாழ்த்துக்களும்



எமது பாடசாலை அதிபர்

உயர்திரு. பரஞ்சோதி செல்வவிநாயகம்

B.A(Tamil Spl) MA(Hons)

B.A.L(Law Degree Annamalai University) PGDE SLPS -I

எமது பாடசாலை ஆசிரியர்

உயர்திரு. நாகலிங்கம் மகேந்திரராஜா

(Spl Trained Build Construction) SLTS-I



கல்விப்புலத்தில் பல தடங்கள் பதித்து 31.12.2022 இன்று ஓய்வு பெறும் எங்கள் பாடசாலை அதிபரும் ஆசிரியரும் ஓய்வு காலத்திலும் சீரிய சேவைகளை வழங்கி இன்னும் நூறாண்டுகள் என்றும் இனிதே வாழ்க!

வாழ்க! வாழ்க!! வாழியவே!!!

(C-5698)

பணியாளர் நலன்புரிச் சங்கம், யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 64





"அந்த மட்டில் தப்பிப் பிழைத்தோம்!" என்றான் வந்தியத்தேவன்.

"உண்மைதான், தம்பி! பட்டத்துக்குப் பாத்தியதை என்பது சாதாரண விடயம் அல்ல; மிக்க அபாயகரமான விடயம் இல்லையா!"

"சோதிடரே! தற்சமயம் காஞ்சியில் இருக்கிறாரே, இளவரசர் ஆதித்த கரிகாலர்."

"இருக்கிறார். அவருடைய சார்பாகத்தானே நீ வந்திருக்கிறாய்!"

"கடைசியாகக் கண்டு பிடித்துவிட்டீர்கள்; சந்தோஷம் அவருடைய யோகம் எப்படி இருக்கிறது."

"ஜாதகம் கைவசம் இல்லை, தம்பி! பார்த்துத்தான் சொல்ல வேண்டும்."

"இளவரசர் மதுராந்தகரின் யோகம் எப்படி?"

"அவருடையது விசித்திரமான ஜாதகம். பெண்களின் ஜாதகத்தை ஒத்தது. எப்போதும் பிறருடைய ஆதிக்கத்துக்கு உட்பட்டிருப்பது..."

"இப்போதுகூடச் சோழ நாட்டில் பெண்ணரசு நடைபெறுவதாகச் சொல்கிறார்களே? அல்லி ராஜ்யத்தைவிட மோசம் என்கிறார்களே?"

"எங்கே தம்பி அப்படிச் சொல்லுகிறார்கள்?"

"கொள்ளிடத்துக்கு வடக்கே சொல்லுகிறார்கள்?"

"கொள்ளிடத்திற்கு வடக்கே சொல்லுகிறார்கள்?"

"பெரிய பழுவேட்டரையர் புதியதாக மணம் புரிந்து கொண்ட இளைய ராணியின் ஆதிக்கத்தைப் பற்றிச் சொல்கிறார்கள் போலிருக்கிறது."

"நான் கேள்விப்பட்டது வேறு."

"என்ன கேள்விப்பட்டாய்?"

"சக்கரவர்த்தியின் திருக்குமாரி குந்தவைப் பிராட்டிதான் அவ்விதம் பெண்ணரசு செலுத்துவதாகச் சொல்கிறார்கள்!"

சோதிடர் சற்றே வந்தியத்தேவன் முகத்தை உற்றுப் பார்த்தார். சற்று முன் அந்த வீட்டிலிருந்து சென்றது குந்தவை தேவி என்று தெரிந்து கொண்டுதான் அவ்விதம் கேட்கிறானோ என்று முகத்திலிருந்து அறிய முயன்றார். ஆனால் அதற்கு அறிகுறி ஒன்றும் தெரியவில்லை.

"சுத்தத் தவறு, தம்பி! சுந்தர சோழ சக்கரவர்த்தி தஞ்சையில் இருக்கிறார், குந்தவைப்பிராட்டி பழையாறையில் இருக்கிறார் மேலும்"

"மேலும் என்ன? ஏன் நிறுத்திவிட்டீர்கள்?"

"பகலில் பக்கம் பார்த்துப் பேச வேண்டும்; இரவில் அதுவும் பேசக் கூடாது. ஆனாலும் உன்னிடம் சொன்னால் பாதகமில்லை. இப்போது சக்கரவர்த்திக்கு அதிகாரம் ஏது? எல்லா அதிகாரங்களையும் பழுவேட்டரையர்கள் அல்லவா செலுத்துகிறார்கள்!"

இப்படி சொல்லிவிட்டுச் சோதிடர் வந்தியத்தேவனுடைய முகத்தை மறுபடியும் ஒரு தடவை கவனமாகப் பார்த்தார்.

"சோதிடரே! நான் பழுவேட்டரையரின் ஒற்றன் அல்ல; அப்படிச் சந்தேகப்பட வேண்டாம். சற்று முன்னால் ராஜ்யங்களும் ராஜ வம்சங்களும் நிலைத்து நில்லாமை பற்றிச் சொன்னீர்கள். நான் பிறந்த வாணர் குலத்தையே உதாரணமாகச் சொன்னீர்கள். தயவு செய்து உண்மையைச் சொல்லுங்கள்; சோழ வம்சத்தின் வருங்காலம் எப்படியிருக்கும்?"

"உண்மையைச் சொல்கிறேன்; சந்தேகம் சிறிதுமின்றிச் சொல்கிறேன். ஆனி மாதக் கடைசியில் காவேரியிலும் காவேரியின் கிளை நதிகளிலும் புதுவெள்ளம் வரும். அப்போது அது நாளுக்கு நாள் பெருகப் போகும் புது வெள்ளம் என்பது காவேரி தீரத்தில் உள்ளவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

ஆவணி, புரட்டாதி வரையிலும் வெள்ளம் பெருகிக் கொண்டுதானிருக்கும். கார்த்திகை, மார்கழியில் வெள்ளம் வடிய ஆரம்பிக்கும்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## பரமார்த்த குரு கதைகள்

### மந்திர சக்தி



(நேற்றைய தொடர்ச்சி)

ஆனால் அதற்கு நீங்கள் தகுந்த வெகுமதியளிக்க வேண்டுமே! என்றான் வழிப்போக்கன்.

"ஒருவனுக்கு உயிரையே அளிக்கும் உனக்கு வெகுமதியாக இந்த உலகத்தையே தரலாம். ஆனால் எங்களால் முடியுமா, இந்த உலகம் எங்கள் சொத்தா? ஆனால் ஓர் உயிரைக் காப்பாற்றுகிற புண்ணியம்... உனக்கு மட்டுமா... உன் குடும்பத்துக்கு மட்டுமா... உன் குருவுக்கே கூடப் போய்ச் சேரும். குருவுக்குப் புண்ணியம் தேடித்தரும் பாக்கியவன் ஆகிவிடுகிறாய் நீ.

கடவுளே உன்னை இப்போது எங்களுக்காகவே அனுப்பி வைத்திருப்பதாக நாங்கள் கருதுகிறோம். கடவுளின் கருணையே கருணை! கடவுளைப் போலவே அவரது அருளால் இவ்வளவு பெரிய சக்தி படைத்திருக்கிற நீயும் கருணை மிகுந்தவன்! தயவு செய்து மனம் இரங்கி இந்தக் காரியத்தைச் செய்.

எனக்குத் தெரி[illegible]

உனக்கு மிகப் பெரிய மனசு. அதிலே நிறைய இரக்கம் இருக்கிறது. இருந்தாலும் எந்த வெகுமதியும் தராமல் இலவசமாகவே நாங்கள் பலனை அடைந்து விடுவது நியாயமாகாது. உன் மகத்தான மந்திர சக்திக்கும் நாங்கள் மதிப்பளிக்க வேண்டும்.

உனக்கு கை நிறைய அள்ளி அள்ளித் தர வேண்டும். ஆனால் எங்களிடம் இருப்தோ கொஞ்சம்தான். வழி நடைச் செலவுக்கென்று மேல் துண்டில் நான்தான் முடிச்சு போட்டு வைத்துக் கொண்டிருக்கிறேன். நாற்பத்தைந்து பணம்தான் இருக்கிறது. உன்னை என் குல தெய்வமாக மதித்து வேண்டுகிறேன்.

[illegible] சிஷ்ய[illegible] நான் என் உயி[illegible]ராகவே கருதுகிறேன். அன்பு கூர்ந்து ஆற்றோடு போய்விட்ட, என் அருமைச் சிஷ்யனை உயிரோடு கொண்டுவா... அப்பனே!" என்று மிகமிக உருக்கமாக வேண்டிக் கேட்டுக் கொண்டார் பரமார்த்த குரு.

அதற்குப் பின்னர் வழிப்போக்கன் 'பெரிய மனம்' வைத்து அவர்கள் வேண்டிய உதவியைச் செய்வதில் உடனடியாக இறங்கினான். அவன் தன் கையில் பிடித்துக் கொண்டு வந்த அந்தத் தடியைத் தன் தலைக்கு மேலே செங்குத்தாகத் தூக்கிச் சிறிது நேரம் நிறுத்தினான்.

அது அவனை விடவும் உயரமாக இருந்து முனையில் இரும்பிலே பூண் கட்டப் பட்டிருந்தது.

அந்தத் தடியை அவர்கள் அண்ணாந்து பார்த்தார்கள். ஆச்சரியமாகப் பார்த்தார்கள். அதைப் புரிந்து கொண்டான் வழிப்போக்கன்.

"என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? இது தான் என் அதிசயமான அதி அற்புதமான ஆச்சரியமான அருமையான மந்திரத்தடி இந்தத் தடியில் தான் மகா மகா மாயா ஜால மந்திர தந்திர சக்தியெல்லாம் மண்டிக் கிடக்கிறது. (தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதியே ஆட்சியின் உயிர்.
நடுநிலைமையே நீதியின் உயிர்.
~ ஜஸ்டினியன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாங்கள் ஒற்றுமையாக இருக்கிறோம் நீங்கள் தீர்வைத் தாருங்கள் என்றுரைக்க...

தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு தாருங்கள் என்ற கோரிக்கையை நம் மூத்த தமிழ் அரசியல் தலைவர்கள் முன்வைத்தனர்.

அதற்காக அவர்கள் பாராளுமன்றத்தில் குரல் கொடுத்தனர். அகிம்சைப் போராட்டத்தை நடத்தினர். சிறை சென்றனர்.

இதன் பிற்பாடே நம் தமிழ் இளவல்கள் ஆயுதப் போராட்டம் பற்றிச் சிந்தித்தனர். இதுவே உண்மை வரலாறு.

ஆக, இலங்கையில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலை மற்றும் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பேரிழப்பு. சமகாலத்தில் நாட்டைத் தாக்கியுள்ள பொருளாதார நெருக்கடி என்பவற்றுக்கு முழுக் காரணமும் இந்த நாட்டின் பேரினவாத சிந்தனையாளர்களும் பேரினவாதத் தீயை வளர்த்த சிங்கள அரசியல் கட்சிகளுமே என்றால், அது நிராகரிக்கப்பட முடியாத உண்மை.

அன்றைய சூழ்நிலையில் பிரதான சிங்கள அரசியல் கட்சி ஒன்று இனப் பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டால், மற்றைய கட்சி அதனை எதிர்த்துத் தடுத்துவிடும்.

இது இந்த நாட்டின் கடந்த கால உண்மை.

ஆம், தமிழ் மொழிக்கு அரச அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வந்தால், அதனை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்த்து பாதயாத்திரை செல்லும்.

இந்த எதிர்ப்பு நிலை ஏற்படும்போதெல்லாம் நம் தமிழ்த் தலைவர்கள்; சிங்கள அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு இனப் பிரச்சினையைத் தீர்க்க முன்வர வேண்டும் என்க் கோரிக்கை விடுவர்.

ஆனால் அதுபற்றிய கருசனை எதுவும் அன்றைய சிங்களப் பேரினவாதத்துக்கு அறவே இருக்கவில்லை.

அதேநேரம் தமிழ் அரசியல் தரப்பு என்றால், அது தந்தை செல்வா தலைமையிலான கூட்டணியாக இருந்தது.

அதாவது அன்று தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்பதில் சர்ச்சையும் பிரிபாடும் இருந்ததில்லை.

ஆனால் இன்றைய நிலைமை அவ்வாறாக இருக்கிறதா என்பதை தமிழ் அரசியல் தரப்புகளே தமிழ் மக்களுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

ஆம், இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தமிழ் அரசியல் தரப்புகள் ஒன்றுபட வேண்டுமென ஜனாதிபதி ரணில், நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ உள்ளிட்ட சிங்கள அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் அடிக்கடி கேட்டவண்ணமுள்ளனர்.

இவ்வாறு அவர்கள் கேட்கும்போது நாங்கள் ஒற்றுமையாகவே இருக்கிறோம்.

நீங்கள் இனப் பிரச்சினைக்கான தீர்வை முன்வையுங்கள் என்றுரைப்பதற்கு எங்களிடம் ஒரு அரசியல் தலைவரும் இல்லை எனும் போது எங்களிடம் ஒற்றுமை இல்லை என்பதை நாங்களே வழிமொழிவதாக நிலைமை அமைகிறது.

ஆக, தமிழ் அரசியல் தரப்புகளின் ஒற்றுமையீனத்தாலேயே இனப் பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் போயிற்று என்றீ சிங்கள ஆட்சியாளர்கள் கூறுவதற்கு இம்மியும் இடம் தந்து விடாதீர்கள்.

உரக்கச் சொல்லுங்கள். தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் என்று.

### வடக்கு தனியார் நிறுவனங்கள்

# புதிய ஆண்டிலிருந்து ஊழியர் நாளேடு பயன்படுத்தப்பட வேண்டும்

### ETF,EPF இலக்கமும் காட்சிப் படுத்தப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் உள்ள தனியார் நிறுவனங்கள் வருகின்ற புதிய ஆண்டில் இருந்து ஊழியர் நாளேடு பயன்படுத்தப்பட வேண்டும் இல்லாது போனால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என் வடமாகாண தனியார் ஊழியர் சங்கத்தின் தலைவர் சாமிநாதன் சிவகுமார் அறிவித்துள்ளார்.

நேற்று யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தனியார் நிறுவனங்களில் 80 வீதமான ஊழியர்கள் தமது வரவை நிறுவனங்களில் பதிவு செய்வதில்லை. எனவே வருகின்ற புதிய ஆண்டில் இருந்து அவர்களுக்கான நாளேடு காட்சிப்படுத்துவதுடன் ETF, EPF இலக்கமும் நாளேட்டில் காட்சிப்படுத்தப்பட வேண்டும்.

இல்லையெனில் தனியார் நிறுவனங்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்போம்.

பெரிய தனியார் நிறுவனங்களில் இந்த நடைமுறை இருக்கிறது. சிறிய நிறுவனங்கள், புடவை கடைகள், உணவகங்களில் தான் இந்த நடைமுறை இருப்பதில்லை.

எனவே ஊழியர்கள் வேலைக்கு வந்து செல்லும் நேரம் நாளேட்டில் பதிவு செய்து காட்சிப்படுத்தப்பட வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ம-7)

# யாழ். மக்களுக்கு சேவையாற்ற கிடைத்தது எனக்கு கிடைத்த பாக்கியம்

### பிரியாவிடை நிகழ்வில் மகேசன்

யாழ் மாவட்ட மக்களுக்காக செயலாற்ற கிடைத்ததை நான் பெரும் பாக்கியமாகதான் நினைக்கின்றேன் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

அவரது பிரியாவிடை நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

குறிப்பாக பல்வேறு பகுதிகளில் இருந்து மாற்றம் ஆகி வருகின்ற மாவட்ட செயலாளர்கள் யாவரும் தற்பெருமையோடும், தன்னம்பிக்கையுடனும் செயற்பட்டு வந்துள்ளனர். எனக்கும் இவ் மூன்று வருடங்களும் சேவையாற்ற கிடைத்தது பல எதிர்பார்ப்புகளையே தந்துள்ளது.

குறிப்பாக எமது பிரதேச செயலாளர்கள், பதவிநிலை அதிகாரிகள், இடர் அனர்த்த முகாமைத்துவம், கொரோனா தொற்று போன்ற காலத்திலும் பாதிக்கப்பட்ட மக்களின் இடங்களுக்கு சென்று அதனை அவதானித்து அதற்கான பரிகாரங்கள், நிவாரணங்களை பெற்றுத்தந்தனர்.

அதற்கான நன்றிகளை தெரிவித்து கொள்வதுடன் எனைய உத்தியோகத்தர்களும் உறுதுணையினை வழங்கியுள்ளனர்.

எனவே எதிர்வரும் காலத்திலும். இவ்வாறு பணிகளான சேவைக்கும், எனக்கு பணித்து இருக்கும் இளைஞர் விளையாட்டு திறன் அமைச்சுடைய செயலாளர் பதவிற்கு பக்கபலாக இருந்து செயற்படுவேன் என்றார். (ம-7,33,104)

# திருவையாறு படித்த மகளிர் திட்ட காணி மீண்டும் இராணுவத்தின் வசம்

(முறிகண்டி)

திருவையாறு படித்த மகளிர் திட்டக் காணி இராணுவத்தினால் மீண்டும் ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்ட நிலையில் காணியில் குடியேற சென்ற மக்கள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட திருவையாறு பகுதியில் படித்த மகளிர் திட்டம் ஊடாக 1975 ஆம் ஆண்டு காணித்துண்டுகள் வழங்கப்பட்டன.

குறித்த காணியில் விவசாயம் செய்து பொருளாதாரத்தில் முன்னேறிய மக்கள், நாட்டில் இடம்பெற்ற யுத்தம் காரணமாக குறித்த காணியை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலையில், குறித்த காணியில் இராணுவம் நிலை கொண்டது. தொடர்ந்து குறித்த காணியின் ஒரு பகுதி இராணுவத்தினரால்விடுவிக்கப்பட்டது.

கிளிநொச்சி இராணுவ தலைமையகமாக இயங்கி வந்த குறித்த இர்ாணுவ முகாம், முல்லைத்தீவு இராணுவ தலைமையகத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த காணியின் உரிமையாளர்கள் கடந்த வாரம் நில அளவை மேற்கொணடனர். குறித்த பணிக்கு இராணுவத்தினரால் இடையூறு ஏற்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், குறித்த காணிக்குள் உட்பிரவேசிக்க வேண்டாம் என புதிதாக அறிவுறுத்தல் பலகைகளும் நிறுவப்பட்டுள்ளன.

இதனால் நேற்று தமது காணியை பார்வையிடச் சென்ற மக்கள் ஏமாற்றமடைந்தனர்.

குறித்த காணி 1975 ஆம் ஆண்டு படித்த மகளிருக்கான திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. அதற்கான ஆதாரங்கள் மக்களிடம் உள்ளதுடன், வரைபடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த காணி மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளமையை பிரதேச செயலாளர் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். காணியை விடுவிப்பதற்கான கோரிக்கைகளும் விடுக்கப்பட்டிருந்தன.

தமது காணியை விடுவித்து தர ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (4-100)

# 15 வயது சிறுமியை கடத்தி மதம் மாற்றி திருமண முயற்சி இருவர் கைது

(தம்புள்ளை)

15 வயது சிறுமியை கடத்திச் சென்று மதம் மாற்றி திருமணம் செய்ய தயாராக இருந்த இளைஞரையும் அவரது மாமாவையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த திருமணத்திற்கு மாமா எனப்படும் நபர் அறிவுரை கூறியதுடன் சிறுமியை மறைத்து வைக்க அடைக்கலமும் அளித்துள்ளார்.

குறித்த சிறுமி கலேவெல பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும், தம்புள்ளை நிகவடவன பகுதியை சேர்ந்த 24 வயதுடைய இளைஞரே இவ்வாறு கடத்திச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2 மாதங்களுக்கு முன்னர் இந்த பாடசாலை மாணவி தனது பாட்டியின் பராமரிப்பிற்காக தம்புள்ளை வைத்திய சாலையில் தங்கியிருந்த வேளையில் இந்த இளைஞனுடன் காதல் தொடர்பு வைத்திருந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

திருமண வைபவத்திற்கு முன்னதாக சிறுமியின் தாய், தந்தை மற்றும் இளைஞனின் உறவினர்கள் பலர் ஒன்று கூடி, சிறுமி மதம் மாறிய மகிழ்ச்சியை கொண்டாட நிகவடவன பகுதியில் உள்ள வீடொன்றில் விருந்து வைத்திருந்தனர்.

அப்போது குறித்த இளைஞருடன் வீட்டில் தனியாக இருந்ததாக பொலிஸாரின் விசாரணையில் சிறுமி தெரிவித்துள்ளார்.

இந்தச் சிறுமியிடம் மேலும் விசாரணை நடத்தியதில், குறித்த 15 வயதுடைய சிறுமி, இதற்கு முன்னரும் கலேவெல பகுதியை சேர்ந்த இளைஞர் ஒருவரால் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இந்த திருமணம் பெற்றோருக்கு தெரிந்தே நடந்ததாகவும் குறித்த சிறுமி தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை பொது அறிவித்தல் - 2023

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களும் வர்த்தக நிலைய உரிமையாளர்களும் அரச தனியார் நிறுவனங்களின் தலைவர்களும் 2023.01.01 ஆம் திகதியிலிருந்து எமது பிரதேச சபையால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளையும் அறிவித்தல்களையும் பின்பற்றி சபையின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**01. ஆதன வரி**

2023ஆம் ஆண்டுக்கான ஆதன வரியினை நல்லூர் மற்றும் கொக்குவில் உப அலுவலகங்களில் செலுத்தி சபையின் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வரியிருப்பாளர்களை கேட்டுக்கொள்கின்றேன். இவ் ஆதனவரியை 31.01.2023 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்த வரியில் 10% கழிவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டிற்குரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாதம் முடிவதற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதன வரியை செலுத்த தவறின் விறாந்துக் கட்டணமாக (தண்டம்) வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதன வரியுடன் சேர்த்து மேலதிகமாக அறவிடப்படும். எனவே குறித்த ஆதன வரிகளை 31.01.2023 ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**02. ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல்**

எமது சபை நிர்வாகத்திற்கு உட்பட்ட ஆதனங்களை கொள்வனவு செய்பவர்களும் ஏற்கனவே ஆதன உடைமையினைக் கொண்டுள்ள போதிலும் எமது சபையின் ஆதன இடாப்பில் பெயர் மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு உரிய நடைமுறையினை பின்பற்றி பெயர் மாற்றத்தினையும் ஆதனத்தில் பௌதீக மாற்றம் ஏற்படுத்தினால் ஆதன பிரிவிடுகை மாற்றத்தினையும் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**03. 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் தொடர்புடைய ஏனைய சட்டங்களின் கீழ் கட்டுமானங்களிற்கான அனுமதிப் பத்திரம் வழங்கல்**

i. எமது நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசத்தில் கட்டடங்கள், எல்லைச்சுவர், எல்லைத் தூண்கள், தொலைத்தொடர்பு கோபுரங்கள், மலசலகூடங்கள், குழாய்க் கிணறுகள் போன்றவற்றை அமைத்தல் அல்லது புதுப்பித்தல் அல்லது பழைய கட்டடத்தினை திருத்தும் வேலை செய்வதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்ற பின்னரே அமைக்கப்படல் வேண்டும். தவறின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

ii. புதிய கட்டட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் போது மழைநீர் சேகரிப்பிற்கான கட்டுமானங்கள் கட்டாயம் அமைக்கப்படுதல் வேண்டும்.

iii. புதிய கட்டடம் அமைப்பதற்கு உரிய அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியாகாதவிடத்து உரிய கட்டணம் செலுத்தி கட்ட அனுமதியைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

iv. கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபையின் உரிய உப அலுவலகங்களுக்கு கட்டடம் பூர்த்தி செய்தமை தொடர்பில் அறிவித்து உரிய கட்டணத்தைச் செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC) பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தினை பயன் படுத்துதல் வேண்டும். பகுதியாக பூரணப்படுத்தியும் அமைவுச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

v. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் உரிய விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.

vi. பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக சபை அனுமதியின்றி வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர மற்றும் தற்காலிக அலங்கார அமைப்புக்கள் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன.

**04. சூழல் பாதுகாப்பு உரிமம்**

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் 23(அ) எனும் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் நிர்வாக பிரதேசத்தில் 2264/18 இலக்க 2022.01.27 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி பத்திரிகையில் விதந்துரைக்கப்பட்ட (ஈ) பிரிவிற்கமைய வியாபாரம் அல்லது தொழில்களிற்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கப்படுகின்ற பொறுப்பு சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் நல்லூர் பிரதேச சபை தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தினை பெற்றுக் கொள்ளவும். ஏற்கனவே உரிமத்தை பெற்றுக் கொண்டவர்கள் உரிமம் காலாவதியாகி இருப்பின் அதனை புதுப்பித்துக் கொள்ளவும். வலுவில் உள்ள சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் இல்லாமல் மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்தினால் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதோடு தண்டப்பணமும் அறவிடப்படும்.

**05. வியாபார அனுமதிப்பத்திரம் 2023**

இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் 2023 ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் உரிய விண்ணப்பங்களை கொக்குவில், நல்லூர் ஆகிய உப அலுவலகங்களில் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து 31.03.2023 ஆம் திகதிக்கு முன்னர் உரிய கட்டணங்களைச் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளல் வேண்டும். 31.03.2023 ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**06. துவிச்சக்கர வண்டி உரிமம்**

துவிச்சக்கர வண்டிகள் வைத்திருப்போர் 2023.03.31 ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2023 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**07. மிருகங்களுக்கான உரிமம்**

வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2023.03.31 ஆம் திகதிக்கு முன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2023 ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்

**08. விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல்**

பிரதேச சபை எல்லைக்குள் வர்த்தக நிலையங்களில் அல்லது பொது இடங்களில் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்த வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் யாவும் சபையினால் அகற்றப்படும்.

**09. வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும்.**

நல்லூர் பிரதேச ச்பையின் எல்லைப் பகுதிகளில் வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. மேலும் அதிகரித்த போக்குவரத்து காரணமாக விபத்துக்களை தவிர்க்கும் முகமாக வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத் தருகின்றேன். மேலும் பொது மக்கள் வீதி போக்குவரத்துக்கு இடையூறாக வீதி ஓரங்களில் கல், மண், சல்லி போன்ற கட்டடப் பொருட்கள் சேமித்துக் கொள்வதை தவிர்த்துக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றேன். வீதியோர பெட்டிகடைகள் மற்றும் தற்காலிக வியாபாரங்கள் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளன. நடமாடும் வியாபாரங்களிற்கு மாத்திரம் அனுமதி வழங்க பரிசீலிக்கப்படும். அத்தோடு சுகாதார பிரிவினரின் சிபாரிசு பெறப்படாத நடமாடும் சுண்டல், சோளம் மற்றும் சிற்றுண்டி விற்பனைக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

**10. பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல்**

பராமரிப்பு இன்றி பற்றைகளாக காணப்படும் காணிகளின் காணி உரிமையாளர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே பற்றைகளாக உள்ள காணிகள் உடனடியாக துப்புரவு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் முகக்கவசம் அணிவதுடன் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

**11. பொது இடங்களில் கழிவு போடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக அமைதலும்.**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பொது மக்களின் குசினிக் கழிவுகள் மட்டும் இலவசமாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஏனைய கழிவுகள் யாவும் உரிய கட்டணங்கள் அறவிடப்பட்டு தரம் பிரித்து வழங்கப்படும் திண்மக்கழிவுகள் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் அரச, தனியார் நிறுவனங்கள் அல்லது பொது அமைப்புக்களினால் கோரிக்கையின் பிரகாரம் உரிய கட்டணங்கள் செலுத்தப்பட்ட பின் திண்மக்கழிவுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். திண்மக்கழிவுகளை பொது இடத்தில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சுற்றாடலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**12. படவரைஞர்களை பதிவு செய்தல்**

2023 ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2023 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும் / புதுப்பித்துக்கொள்ளவும் காலஅவகாசம் வழங்கப்படுகின்றது. எனவே படவரைஞர்கள் இவ்வறிவுறுத்தலின் பிரகாரம் செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்

**13. பொதுச் சந்தை**

எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறும், நிலக்கீழ் விளைச்சல் தவிர்ந்த ஏனைய மரக்கறிகளுக்கு கழிவுமுறை முற்றாக தடை செய்யப்படுகின்றது என்பது அறியத்தரப்படுகின்றது. அத்துடன் எந்தவொரு உள்ளூராட்சி அதிகார சபைக்கு சொந்தமான பொதுச் சந்தைச் சுற்றாடலில் இருந்தும் 500 மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறிகள், முட்டை, இறைச்சி வகை என்பன விற்பனை செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. மீறிச் செயற்படுபவர்கள் மீது உரியவாறு சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**14. இரசாயன மருந்து விசிறிய பழங்கள்**

பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய முறையில் அனுமதியற்ற நியமங்களை மீறி மருந்து விசிறிய பழங்கள் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளதுடன் மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**15. கட்டாக்காலிகள்**

பொது மக்கள் தமது கால்நடைகளை கட்டி வைத்து வளர்க்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இதனை மீறும் சந்தர்ப்பங்களில் பொதுவீதியில் அலைந்து திரியும் க்ட்டாக்காலிகள் சபையால் பிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

**16. கழிவுநீர்**

பகிரங்க வடிகால்களில் சட்டரீதியற்ற முறையில் நீர், வியாபார கழிவுநீர் சேர்க்கப்படுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. எனவே உரியவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்படும்.

**17. பொதுப்போக்குவரத்துக்கு இடையூறாக பெரும் கட்டுமானப் பொருட்களை பறித்தல்.**

பொதுவீதியில் சபை அனுமதியின்றி கட்டுமான பொருட்கள் சேகரித்து வைத்தல், உரிய குறியீடுகள் காட்சிப்படுத்தாது விடல் மற்றும், டெங்கு நோய்க்காவி பரவக்கூடிய ஆபத்தான நிலைமைகளை பேணுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

**பத்மநாதன் மயூரன்**
**தவிசாளர்**
**நல்லூர் பிரதேச சபை**

(C-5697)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்வெட்டு...

எனினும், ABCDEFGHIJKLPQRSTUVW ஆகிய பிரிவுகளின் பகுதிகளுக்கு ஜனவரி 2ஆம் திகதி 2 மணி நேரம் 20 நிமிடங்கள் மின்வெட்டு அமுல்படுத்தப்படுமென பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

பகலில் ஒரு மணி நேரமும், இரவில் ஒரு மணித்தியாலமும் 20 நிமிடமும் மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## பயணிகள்...

இடையில் ஜனவரி மாதம், பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், காங்கேசன்துறை துறைமுகம், உள்வருகை மற்றும் வெளியேறலுக்கு அனுமதியுடைய துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## முதல்வர்...

முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இரண்டாவது தடவையாக வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு இருந்தபோதும் கட்சிகளின் ஆதரவு கிடைக்காத நிலையில் மணிவண்ணன் இராஜினாமா முடிவை எடுத்ததாக மணிவண்ணனுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

2020 டிசம்பர் 30 இல் மாநகர முதல்வர் பதவிக்கு ஆர்னோல்டும் மணிவண்ணனும் போட்டியிட்டனர். ஒரு வாக்கு வித்தியாசத்தில் மணிவண்ணன் முதல்வராக தெரிவானார்.

45 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் யாழ்.மாநகர சபையில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் 16 உறுப்பினர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் 13 உறுப்பினர்களும் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் சார்பில் 10 உறுப்பினர்களும் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 3 உறுப் பினர்களும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி சார்பில் 2 உறுப்பினர்களும் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் ஒரு உறுப்பினரும் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## பதில் அரச...

ஞர் விவகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளராக செல்கிறார்.

இந்நிலையில் புதிய அரசாங்க அதிபர் ஒருவர் நியமிக்கப்படும்வரை பதில் அரசாங்க அதிபராக மருதலிங்கம் பிரதீபன் கடமையாற்றுவார். (ம-7,33,104)

## கிணற்றடி...

மதிக்கத்தக்க சண்முகம் நாகேஸ்வரி என்பவரே நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குளிப்பதற்காக சென்றவரே தவறி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

## வட மாகாண...

வலயத்தின் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியவர்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராக இவர் கடமையாற்றிய காலத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட கல்விச் சமூகத்தின் பெரும் மதிப்பைப் பெற்றிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடமாகாணத்திற்கான தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அலுவலகம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கொரோனா...

ஹேமந்த ஹேரத் தெரிவித் துள்ளார்.

சீனா, இந்தியா போன்ற பல நாடுகளில் சமீபகாலமாக கோவிட் நோயாளர்கள் அதிகரித்து வருவதாகவும் எச்சரிக்கையாக இருப்பது முக்கியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் தற்போது எமக்கு கடுமையான கோவிட் அச்சுறுத்தல் இல்லையென்றாலும், நாங்கள் முழுமையாக ஆபத்தில் இருந்து வெளியேறிவிடவில்லை என்று கூற முடியாது. அது எந்த நேரத்திலும் வெளிப்படலாம். பாதுகாப்பாக இருப்பதற்கு மிகவும் திறமையான மற்றும் எளிமையான வழி, ஒரு மீற்றர் தூரத்தை பராமரித்தல், முகக்கவசம் அணிதல் மற்றும் கைகளை கழுவுதல் போன்ற அடிப்படை சுகாதார நடைமுறைகளை தொடர்ந்து கடைப்பிடிப்பதாகும்" என்றும் அவர் தெரிவித்தார்.

தற்போது நாளாந்தம் சில நோய்த் தொற்றுகள் மாத்திரமே பதிவாகி வருவதாகவும் சந்தேகத்திற்கிடமான அனைத்து தொற்றாளர்களும் கோவிட் சோதனைகளுக்கு உட்படுத்தப்படாததால் சமூகத்தில் அதிக நேர்மறையான தொற்றாளர்கள் இருக்கக்கூடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## பேருந்தில்...

பயணித்துள்ளது. இதன்போது இயக்கச்சி பகுதியினை பேருந்து அண்மித்தபோது பயணி ஒருவரின் கைப்பையில் இருந்த 50,000 ரூபாய் பணம் மற்றும் வளைகாப்பு ஒன்றும் களவாடப்பட்டிருந்தது.

பேருந்து பரந்தன் சந்தியினை அண்மித்தபோது சந்தேகத்திற்கிடமாக நின்ற பெண்கள் மூவரை நடத்துனர் விசாரித்த போது அவர்கள் தப்பியோட முயற்சித்துள்ளதுடன், பொதுமக்களினால் குறித்த மூன்று பெண்களும் நைய்ப்புடைக்கப்பட்டனர். அதன் பின்னர் அவர்கள் வசமிருந்த பணம் மற்றும் நகை மீட்கப்பட்டதுடன் பரந்தன் சந்தியில் நின்ற பொலிஸாரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர். (ம-7,250)

## அரச...

ஆம் ஆண்டு அரச அதிகாரிகளுக்கு அதிக பட்சமாக 4,000 ரூபாய் சிறப்பு முற்பணத்தை செலுத்த அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பில் பொது நிர்வாக அமைச்சினால், அமைச்சுகள், உள்ளூராட்சிகள் மற்றும் திணைக்களத் தலைவர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த முற்பணம் செலுத்தும் நடவடிக்கை 01.01.2023 அன்று ஆரம்பமாகவுள்ளதுடன், 28.02.2023 அன்று முடிவடையவுள்ளது.

இந்த சுற்றறிக்கை பொது திறைசேரியின் அனுமதியுடன் வெளியிடப்பட்டுள்ளது. (ம-7)

## போதைப்பொருள் பாவனையாளரின் திருமணம் நிராகரிப்பு

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனைக்கு உள்வாங்கப்பட்ட நபர் ஒருவரின் திருமணத்திற்கான சமய அங்கீகாரத்தை அக்கரைப்பற்று ஜும்மா பெரிய பள்ளிவாசல் நிராகரித்துள்ளது.

குறித்த விண்ணப்பத்தை பரிசீலனைக்காக எடுத்துக் கொண்ட ஜும்மா பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை குறித்த நபர் போதைப்பொருள் பாவனைக்கு உள்வாங்கப்பட்டவர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் எனவே, திருமண சடங்கை நிறைவேற்றி வைப்பதை தவிர்த்துள்ளதுடன் குறித்த விண்ணப்பத்தையும் நிராகரித்துள்ளது. (ம-7)

## தயார் நிலையில்...

திற்கு சென்ற பொலிஸார் 13 பேரை மடக்கி பிடித்துள்ளனர்.

மன்னாரை சேர்ந்த ஒருவரும் மானிப்பாய் பகுதியை சேர்ந்த 06 பேரும் ஏனையவர்கள் அரசடி மற்றும் அரியாலை பகுதியைச் சேர்ந்தவர்கள் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-7,33,104)


HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.12.30
சீட்டிழுப்பு இலக்கம் 294
மீனம் 01 20 24 45 மீனம்
விசேட சீட்டிழுப்பு
49122
0326661 0754486
0379551 0902252 0377237
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 30/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1440
வெற்றி இலக்கங்கள்
மகரம் 9 1 9 6 3 8
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.12.30
சீட்டிழுப்பு இலக்கம் - 1015
I 15 17 46 76
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2022.12.30
சீட்டிழுப்பு இலக்கம் 3227
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
E 20 24 31 74
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 30/12/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1333
Q 01 03 29 62 66

மஹஜன சம்பத
திகதி 2022/12/30
சீட்டிழுப்பு இலக்கம் 4985
Q 8 0 4 6 1 5
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1960
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.12.30
தினம் வெள்ளிக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,509,740/-
P 27 52 59 60
4604 572

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.12.30
சீட்டிழுப்பு இல : 4121
வர்ணம் : செம்மஞ்சள்
ரூ. 3,910,220/-
வெற்றி இலக்கங்கள்
06 17 35 59 G

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 268
சீட்டிழுப்பு திகதி 2022.12.30
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 41 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,612,560/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,190,337.60
திகதி 2022-12-30
வெற்றி வாரம் 3672
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள் 03 19 29 40 கும்பம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 9,511,400/-

லக்ன
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 37 04 21 22 39
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 292,633,130.20
சீட்டிழுப்பு வாரம் 1136
வர்ணம் பச்சை
திகதி 2022.12.30 வெள்ளிக்கிழமை
73839 86745

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1786
சீட்டிழுப்பு திகதி : 2022.12.30
ரூ. 4,129,260/-
வெற்றி இலக்கங்கள் 27 43 47 52 B


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஜனவரி 5 பாராளுமன்றம்

ஜனவரி மாதம் 17 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டிருந்த பாராளுமன்றத்தை ஜனவரி 5 ஆம் திகதி கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பிலான தெரிவுக்குழு கூட்டத்தின் போது ஜனவரி 5 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வு நடைபெறும் தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் 17 ஆம் திகதி வரை பாராளுமன்ற விடுமுறைக் காலம் நீடிக்கப்படுவதை கருத்திற்கொண்டு, 5 ஆம் திகதியே பாராளுமன்ற அமர்வை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

புனர்வாழ்வு பணியக சட்டமூலம் மற்றும் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள வளாகங்களை மீள பெறுவதற்கான சட்டமூலங்களின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதமும் வாக்கெடுப்பும் 5 ஆம் திகதி நடைபெறவுள்ளது.(ம-7)


## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
- ✓ONLINE APPLICATIONS
- ✓VISA APPOINTMENTS
- ✓PASSPORT APPLICATION
- ✓POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.




(C-5710)

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன். யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777



## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-5710)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777



## IELTS -New batch ஆரம்பம்

Sp.Offer 10% Discount உடன்
Basic & Advance grammar Class
First Class free of charge
இல.53, சிவகுருநாதர் வீதி,
Brown Rd Jaffna.
077 798 9830 by B.MURALI
(13913)
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student visa செய்து கொடுக்கப்படும்.



## வேலை வாய்ப்புக்கள்

தகைமை இருந்தாலும் தகைமை இல்லா விட்டாலும் பதிவு செய்யும் அனைவருக்கும் திறமைக் கேற்ற வேலை வாய்ப்புக்கள்

**100 + பகுதி நேர வேலை வாய்ப்புக்கள்**

நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள அழையுங்கள்

**074 320 8923**

இல.45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
(13949)



## A/L 2024
### English Medium Classes

- Biology
- Chemistry
- Bio Systems Technology
- Science for Technology
- Agricultural Science

075 987 5566
(13969)


## ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் அதிபர்
திருமதி **மீனலோஜினி சுப்பிரமணியம்**
Principal SLPS -I
BA, PGDE (Gold medal)
M.Ed, DFM

அவர்கள் 31.12.2022 அன்று ஓய்வு பெறுகின்றார். அவர் தனது ஓய்வுக்காலத்தில் உடல். உள ஆரோக்கியத்துடன் எல்லா நலன்களும் பெற்று வாழ வேண்டும் என கந்தரோடை அருளானந்தப் பிள்ளையாரின் ஆசியை வேண்டி நிற்பதுடன் நாமும் மனதார வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நல்லுறவுக் கழகம்
யா/ கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
(13970)


## Micom

Law of contract, Company Law,
Commercial Law,Cambridge english
(Mahajana College Last time 2 students got A)
ILTES கற்பிக்கப்படும்Lecturer details
international College of Law,
Business & Computer Studies
LLB (Col Uni), Dip in Journalisam,
Lecturer in laws, ICFAI University
(Hyderabad) University of Ballarat
(Australia)



**Colombo Branch**
**Veeramanikathevanthurai,**
**Myliddy K.K.S,**
**Jaffna.**
**Vaverset place,**
**moor Road.**

Mohanarajah Joganatham
(M.Raja Joganathanam)
proprietor
(13930)

Hotline:077 395 0215



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கோயிலாக்கண்டி பகுதியில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- A32 பிரதான வீதியில் இருந்து 600m தூரம்.
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- A32 பிரதான வீதியில் இருந்து இரு வழிப் பாதைகள் உள்ளன.
- நெய்தல் பீச்சுக்கு (Beach) அருகாமையில் உள்ளது.
- கோயிலாக்கண்டியில் இருந்து யாழ். நகரத்திற்கும் சாவகச்சேரி நகரத்திற்கும் அரச தனியார் பஸ் போக்குவரத்துச் சேவை உள்ளது.
- இக் காணியின் தெற்கு எல்லை கடற்கரை (பீச்)
- நல்ல தண்ணீர் ஊற்றுச்சூழல் (கட்டுக் கிணறும் உள்ளது)

ஒரு பரப்பின் விலை 675,000 ரூபாய் மட்டும்

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்
(13966)

077 814 7389, 077 986 5457



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரி பகுதியில் 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- பெரிய நாகதம்பிரான் கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- A9 பிரதான வீதியில் இருந்து 700 m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 72 உள்ளன.
- குடிதண்ணீர் கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- நீர் பாய்ச்சும் வசதிகள் உள்ளன.(பைப் லைனிங்)
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

(13966)

பார்வையிடும் நேரம்
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு - ஜெயம்

077 241 7589, 077 026 7619


## மரண அறிவித்தல்

தோற்றம்
25 . 02 . 1950



மறைவு
28 . 12 . 2022

# நடராசா சிவரட்ணம்

(ஓய்வுநிலை உதவிப் பொதுமுகாமையாளர்,
இலங்கை வங்கி - வட மாகாணம்)

ஆதிகோவிலடி வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் முருகையன் கோவிலடி வல்வெட்டித்துறையினை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சிவரட்ணம் அவர்கள் கடந்த 28.12.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - வள்ளியம்மாள் தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் - அருந்ததி தம்பதிகளின் மூத்த மருமகனும் நளினியின் (வசந்தி) அவர்களின் அன்புக் கணவரும் திருமதி பிரதீபா சசிகுமார் (ஆசிரியை), சாரூபன் சிவரட்ணம் (நிர்வாக இயக்குநர் - V2 Travels மற்றும் கனடா குடிவரவு ஆலோசகர்), திருமதி காருண்யா மாதீபன் (முன்னாள் உதவி முகாமையாளர் - மக்கள் வங்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும் திரு.வே.சசிகுமார், திருமதி விசாந்தினி, திரு.க.மாதீபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் மகிழினியா(அமரர்), அருள்சாயித்யன், அருந்ததி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.01.2023 திங்கட்கிழமை அன்று நண்பகல் 12.00 மணிளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 3.00 மணியளவில் தகனக் கிரியைக்காக மயிலியதனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்: குடும்பத்தினர்*
077 236 7407
(13971)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.